வினா 69-க்கு போடப்பட்ட துணை வினாவிற்கான விடையைத் திருத்தி வருவாய்த்துறை அமைச்சர் அறிக்கை

(2) அமைச்சர் அறிக்கை.

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : நேற்றைய தினம் நான் மது பானக் கடைகளில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிற மது பானங்கள் விற்கப்படுகிறதா என்று கேட்கப்பட்ட கேள்விக்கு (வினா 69) பதில் சொல்லும்போது "இந்தியன் மேட் பாரின் லிக்கர் தான்" விற்கப் படுகிறது என்று சொன்னேன். விசாரித்ததில் இப்போது ஒன்றைத் தெரி வித்துக் கொள்கிறேன். நேற்று சொன்ன பதிலை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிற மதுபானங்களும் கூட ஓரளவிற்கு விற்கப் படுகிறது என்று திருத்திக் கொள்கிறேன்.

(3) ஒற்றிவைப்புத் தீர்மானம்.

(அ) அடிசன் கம்பெனி கதவடைப்புக் குறித்து.

MR. DEPUTY SPEAKER :—I have also received notice of an adjournment motion from Dr. Hande to discuss a matter of urgent public importance i.e. dispute between the management and workers of Addison and Co. which had led to Lock-out in the factory.

டாக்டர் எச். வி. ஹாண்டே : மதிப்பிற்குரிய பேரவைத் துணைத் தலைவரவர்களே, அடிசன் கம்பெனியில் மீண்டும் சில பிரச்சினைகள் வந் திருக்கின்ற காரணத்தால் இந்தச் சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து, அது குறித்து விவாதிக்க வேண்டுமென்று உங்கள் மூல மாகக் கேட்டுக் கொள்கிறேன். அந்தக் கம்பெனியில் ஏற்கெனவே 10 பேர் டிஸ்மிஸ் செய்யப்பட்டு, அதற்குப் பிறகு முத்துக்கிருஷ்ணன் என்பவர் 18–1–1973 அன்று சஸ்பெண்ட் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர் ஒரு இலாகாவில் வேலை செய்து கொண்டிருந்த போது, வேறு ஒரு இலாகா விற்குச் சென்று வேலை பாருங்கள் என்று..................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : "லாக்-அவுட்" செய்யப் பட்டிருப்பதால் அந்தப் பிரச்சினை எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந் தது என்பதைச் சொல்லவேண்டும்.

The honurable Member need not go into detais. அது ஒரு டிஸ்கஷன் மாதிரி ஆகிவிடும்.

டாக்டர் எச் வி. ஹாண்டே : லாக் அவுட் நடந்து இருக்கிறது என்பதைப் பற்றிப் பேசுவது என்றாலும், ஓரிரு கருத்துக்களைச் சொன்னால் அது அமைச் சர் அவர்கள் பதில் கூறுவதற்கு வசதியாக இருக்கும் என்ற காரணத்தால் கூற விரும்புகிறேன். நான் 3 நிமிடங்களுக்கு மேல் எடுக்க மாட்டேன் முத்துக்கிருஷ்ணன் ஒரு இலாகாவில் வேலை செய்து கொண்டிருந்தபோது அவரை வேறு ஒரு இலாகாவிற்குச் சென்று வேலை செய்யுங்கள் என்று சொன்ன நேரத்தில், அவர் செய்து கொண்டிருக்கிற வேலையை முடித்து விட்டு அதற்குப் பிறகு அங்கே சென்று வேலைசெய்கிறேன் என்று சொன்னார் என்ற காரணத்திற்காக, மேனேஜ்மேண்ட்டாரால் சஸ்பெண்ட் செய்யப் பட்டார். இதையும் 10 பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டதை எதிர்த்தும், போராட்டமாக ஸ்டிரைக்கில் ஈடுபட்டார்கள். அந்த ஸ்டிரைக்குக்குப் பிறகு, மேனேஜ்மெண்ட் லாக்-அவுட் செய்திருக்கிறார்கள்.

The management declared the lock-out on 25—1—1973 அந்தத் தேதியிலிருந்து லாக்-அவுட் நடந்து இருக்கிறது. மதிப்பிற்குரிய அமைச்சர் ப. உ. சண்முகம் அவர்களிடத்தில் அந்தத் தொழிலாளர்கள் ஒரு விண்ணப்பத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் வந்த நேரத்தில் மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் இல்லை என்ற காரணத்தால் அந்த அமைச்சரிடத்தில் கொடுத்திருக்கிறார்கள். சிம்சன் கன்சர்னில் உள்ள தகராறும் இன்னும் முடிவாக வில்லை. இது குறித்து ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அங்கே 180 பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அடிக்கடி முதலமைச்சர் அவர்கள் மேனேஜ்மெண்டிற்குச் சொல்கிறேன். என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். இருப்பினும் இந்த சிம்சன், அடிசன் கம்பெனி பிரச்சினை தீர்ந்தபாடில்லை. இதனால் நாளைய தினம் ஒரு பெரிய பயங்கரமான நிலைமை, தொழிலாள தோழர்களின் ஒரு பெரிய ஊர்வலம் நடத்தும் நிலைமை ஏற்படலாம். ஆகவே, முன்கூட்டியே அமைச்சர் அவர்களும், அந்த இலாகாவைச் சேர்ந்த அதிகாரிகளும் நடவடிக்கை எடுத்து, அந்த லாக்-அவுட்டை விரைவிலேயே லிப்ட் செய்வதற்கு முயற்சிகளை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதன் காரணமாக, நாளையதினம் தொழிலாளர்கள் மனதில் ஏற்படும் வருத்தத்தையும் கவலையையும் நிச்சயமாக நாம் குறைக்கலாம். ஆகவே, இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்கவும், என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதைப் பற்றி விளககவும், இந்தச் சபையின் மற்ற நடவடிக்கைகளை ஒத்தி வைத்து இது குறித்து விவாதிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு என். வி. நடராசன் : தலைவரவர்களே, சென்னை அடிசன் கம்பெனி லிமிடெட் தொழிற்சாலையில் சுமார் 1,650 தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள். இந்தத் தொழிற்சாலையில் இரும்பு வார்ப்புகளும் பொறியியல் தொழிலுக்கு வேண்டிய வெட்டும் கருவிகளும் தயாரிக்கப்படுகின்றன. இத்தொழிற்சாலையில் மூன்று அங்கிகாரம் பெற்ற தொழிற்சங்கங்கள் இருக்கின்றன.

1. தமிழ்நாடு நேஷனல் இன்ஜினீயரிங் எம்ப்ளாயீஸ் யூனியன், சென்னை-14.

2. சிம்சன் அண்ட் குருப் கம்பெனிஸ் ஒர்க்கர்ஸ், யூனியன் சென்னை-2.

3. சிம்சன் அண்ட் குரூப் கம்பெனிஸ் ஸ்டாப் யூனியன், சென்னை-2

தமிழ்நாடு நேஷனல் இன்ஜினீயரிங் எம்ப்ளாயீஸ் யூனியன் தொழில் துறையில் ஒழுங்கு முறை விதிகள் அடிப்படையின்படி 15-2-1972 முதல் நிர்வாகத்தினரால் அங்கீகாரம் பெற்றதிலிருந்து இன்னும் இரண்டாண்டு காலம் முடிவடைய வில்லை. சிம்சன் குரூப் கம்பெனி தொழிலாளர்கள் சங்கம் மற்றும் சிம்சன் குரூப் கம்பெனிஸ் ஸ்டாப் யூனியன் ஆகிய இரண்டு சங்கங்கள் அங்கீகாரம் கேட்டு கோரிக்கை எழுப்பியுள்ளது. மேலும் 1,000 தொழிலாளர்களிடமிருந்து அவர்கள் இச்சங்கங்களைச் சேர்ந்தவர்கள்